ததைத் தொடர்ந்து, அது பரிசீலிக்கப்பட்டுக் கொண்டு இருக்கிறது. எனவே தற்போது ஊதியத்தை உயர்த்துகிற திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மேம்பாட்டுக் கழகத்தில் பணியாற்றுகிற பெண்களிலே ஏறத்தாழ 100-க்கு அதிகமான வர்கள் ஊனமுற்றவர்களாகவும், தாழ்த்தப்பட்ட சமுதாயத் தைச் சேர்ந்தவர்களாகவும் இருக்கிறார்களே, அதைக் கருத்தில் கொண்டாவது அவர்களுக்கு நல்ல வேலைவாய்ப்புக்கான அந்த ஓர்க்கிங் கண்டிசன்களை எல்லாம் நன்றாக மாற்றிக் கொடுத்து ஊதியத்தை நியாயமான முறையில் நிர்ணயம் செய்து அவர்களுக்கும் சமநீதி வழங்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நடைபெற்றுக் கொண்டு இருக்கிற ஒரு தொழிற்கூடம் அல்ல. இது ஒரு பயிற்சி நிறுவனம். பயிற்சி முடிந்ததற்குப் பிறகு, அந்தப் பெண்களை வெவ்வேறு துறைகளிலே பணியில் அமர்த்துவதற்கான ஏற்பாட்டைக் கடந்த காலத்தில் செய்து இருக்கவேண்டும். அவர்கள் செய்யத் தவறியதினுடைய விளைவு, பயிற்சி பெற்ற இடத்திலேயே தொடர்ந்து அந்தப் பெண்கள் 60 பேர்கள் பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். எனவே அவர்களுக்கு இருக்கிற நிலையை உணர்ந்துதான் அவர்களை அரசுத் துறையில் வேறு அச்சகங்களில் பணியிலே அமர்த்திக் கொள்வதற்கான பரிசீலனையை இந்த அரசு இன்றைக்கு மேற்கொண்டு இருக்கிறது.

வத்தலக்குண்டு அரசு மருத்துவமனைக்கு இருதய நோய் சிகிச்சைப் பிரிவு

* 4005—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வத்தலக்குண்டு அரசு மருத்துவமனைக்கு இருதய நோய் சிகிச்சைப் பிரிவு வேண்டுமென்ற கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

1990 ஏப்ரல் 10]

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கிடமில்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வத்தலக்குண்டு மலையையொட்டி கீழே யிருக்கிறது. மலையிலே ஆக்சிடென்ட்டான கேஸ்கள், கொடைக்கானல் மலைப் பகுதியிலே அந்த இருதய நோய்ப் பட்டவர்களை, இங்கே கீழே எடுத்துக்கொண்டு வருவதற்கு மிகவும் சிரமம் அடைகிறார்கள். மதுரைக்குக் கொண்டு வருவதற்குள்ளாக அந்த உயிரே போய்விடுகிறது. ஆகையி னாலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீல னைக்கு எடுத்துக் கொண்டு, இந்த முக்கியமான விஷயத்தை ஆராய்ந்து அங்கே மறுபடியும் அதை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வ சிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதெல் லாம் இருதயப் பிரிவு சிகிச்சை முறைகள் மாவட்டத் தலை நகரங்களிலே மட்டுமே கொடுக்கப்பட்டு வருகின்றன. இப்போது மதுரை மாவட்டம் இரண்டாக பிரிக்கப்பட்டதால், தாலுகா மருத்துவ மனையாக இருந்த பெரியகுளம் அரசு மருத்துவமனை மாவட்ட தலைமை மருத்துவ மனையாக உயர்த்தப் பட்டது. ஆகவே, முதலிலே பெரியகுளத்திலே இது போன்ற வசதிகளைச் செய்து கொடுப்பதற்கான கருத்துரு இப்போது அரசுக்கு வந்துள்ளது. ஆகவே மாவட்டத் தலை நகரங்களில் மட்டுமே இப்போது செய்கின்ற செயற்குறிப்பு அரசிடம் உள்ளது. மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை இப்போது இருக்கிற நிதிநிலையில் செய்ய முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : பேரவைத் தலைவர் அவர்களே, பெரியகுளத்தை மதுரை ஜில்லாவோடு இணைத்து விட்டார்கள். நாங்களோ திண்டுக்கல்-காயிதே மில்லத் ஜில்லா விலே இருந்து கொண்டு இருக்கிறோம். ஆகையினாலே, திண்டுக்கல் ஜில்லாவிலே இருக்கிற எங்களுக்கு அந்தப் பகுதி யிலே வரக்கூடிய அந்த ஏழைகள் பாதிக்கப்படுகின்ற காரணத் தால்—இதற்கு ஒன்றும் அதிகமாகச் செலவில்லை—ஆகையி னாலே இங்கே முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள்— ஆகையினாலே அதிகம் செலவு இல்லாத அளவிற்கு இந்த மனநோய், அதாவது இருதய நோய்ச் சிகிச்சைப் பிரிவை மறுபரிசிலனை செய்து ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நோயில் என்ன இவ்வளவு பெரிய தடுமாற்றம் ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவர் அவர்களே, இருதய நோய் சிகிச்சைக்கு அதிகமான செலவில்லை என்ற தவறான குறிப்பைக் கொடுக்கிறார்கள். அதை ஆரம்பிக்கவேண்டும் என்று சொன்னால், முதலிலே, ஐ.சி.சி. யூனிட்டை ஆரம்பித்து, அதற்குப் பிறகுதான் அதை வளர்ப்பதற்கான வாய்ப்புக் கூறுகள் இருக்கின்றன. அவர்களுடைய மாவட்டத் தலை நகரம் திண்டுக்கல்லாக இருக்குமானால், அந்தத் திண்டுக் கல்லிலே, மாவட்டத் தலைநகரத்திலே ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகளை இந்த அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாதுகாக்கப்பட்ட குடிநீர்

*5913 திரு. க. பழனிசுவாமி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேலம் மாவட்டம், பூலாம்பட்டி பேரூராட்சிக்கு உட்பட்ட கிராமங்களுக்கு உலக வங்கியின் மூலமாக பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கியின் மூலமாக குடிநீர் வழங்கும் திட்டம் இப்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

9–55 மணி

திரு. க. பழனிசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1990–91-ல் இத்திட்டம் எடுத்துக்கொள்ளப் படுவதாக அமைச்சரவர்கள் குடிநீர் வழங்குகின்ற ஆலோசனை கூட்டத்தில் சொல்லப்பட்டது அதையொட்டி அமைச்சரவர்கள் இத்திட்டத்தை எடுத்துக்கொள்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நடைமுறையில் இல்லை என்று சொல்லியிருக்கிறேன். இப்பேரூராட்சியின் குடிநீர்த் திட்டத்தை செயல்படுத்துவதற்காக